சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 05.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 112/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-3 |
| சாட்சியின் பெயர் | : | செல்வராஜ் |
| தந்தை பெயர் | : | பெத்தபெருமாள் |
| கிராமம் | : | திருக்கண்ணமங்கை |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 72 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். பக்கிரிசாமி என்பவரை தெரியும். அவர் எனது பக்கத்து தெருவை சேர்ந்தவர் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தேவர் சமூத்தை சேர்ந்தவர் ஆவார். இந்த

வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னை போலீசார் விசாரணை செய்தார்கள். அப்போது எனக்கு வழக்கு விவரம் தெரியாது என்று கூறினேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 25.10.2009 ஆம் தேதி இரவு 9.00 மணிக்கு இருக்கும் வீட்டிலிருந்தேன் என்றும், அப்போது போன் வந்தது என்றும், என்னவென்று கேட்டான் அ.சா-2 ராஜேந்திரன் மகன் அ.சா-1 ராகவனை அடிப்பதற்க்கு தேரடியில் ஆள் இருப்பதாக சொன்னார் யார் சொன்னாது என்று சொல்லவில்லை. பிறகு நான் பக்கிரிசாமி, அ.சா-2 ராஜேந்திரனிடம் போய் தகவல் சொன்னேன் என்றும், பிறகு பக்கிரிசாமியும் அ.சா-2 ராஜேந்திரனும் தேரடிக்கு போனார்கள் நான் கொஞ்ச நேரம் கழித்து தேரடிக்கு போனேன் அப்போது மணி 09.15 இருக்கும் என்றும், பக்கிரிசாமியும், அ.சா-2 ராஜேந்திரனும் ராகவனை தேடி கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது பஞ்சாயத்து போடு கட்டிடம் மறைவிலிருந்த எங்க ஊர் கலியபெருமாள் மகன்கள் சுதாகர் திருநாவுக்கரசு, வாஞ்சிலிங்கம் மகன் கார்த்தி, பக்கிரிசாமி மகன் கலைவாணன், ராஜமாணிக்கம் மகன் தினேஷ், சேகர் மகன் ராஜா, பிரபாகரன் மகன் தீபக் (எ) ரமேஷ்பாவு எல்லோரும் வந்து இந்த பள்ள பற புண்ட மகனுக்கு தான்டா காத்துக்கொண்டு இருந்தோம் என்றும், இந்த பற குச்சிகாரி மகனுகளை காலிபண்ணுடா என்று சத்தம் போட்டுக்கொண்டு சுதாகர் அரிவாளால் பக்கிரிசாமி கழுத்தில் இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லிக்கொண்டு வெட்டினார் என்றும், திருநாவுக்கரசு இத்தோடு ஓழிந்துபோடா என்று சொல்லிக்கொண்டு வலது முழங்கையில் அரிவாளால் வெட்டினார் என்றும், கார்த்தி இத்தோடு தொலைந்தாய் என்று சொல்லிக்கொண்டு அரிவாளால் இடது கை புஜத்தில் வெட்டினார் என்றும், கலைவாணன் இத்தோடு ஒழிந்தாய் என்று சொல்லிக்கொண்டு அரிவாளால் முதுகில் வெட்டினார் என்றும், அப்போது ராஜேந்திரன் மறைத்த போது சுதாகர்

நீயும் இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லிக்கொண்டு பின் பக்க தலையில் வெட்டினார் என்றும், தினேஷ் இத்தோடு ஒழிந்தாய் என்று சொல்லிக்கொண்டு பக்கிரிசாமியின் இடுப்பு இடது கண் புருவத்தில் வெட்டினார் என்றும், பிறகு காயம்பட்ட பக்கிரிசாமி, ராஜேந்திரன் எங்கும் ஓடி விடமால் ராஜாவும் தீபக்கும் மறைத்தார்கள் என்றும், பக்கிரிசாமியும், ராஜேந்திரனும் சத்தம்போட்டார்கள் என்றும், எல்லோரும் வராங்கடா ஓடுங்கடா என்று ராஜாவும், தீபக்கும் சத்தம் போட்டுக்கொண்டு ஓடிவிட்டார்கள் என்றும், இந்த சம்பவம் எங்கள் தெரு ராகவன், இளங்கோ ஆகியோர்களை வீட்டிற்கு அழைத்து வந்தோம், ஆம்புலன்ஸ் வந்தது என்றும், பிறகு நான் காயம் பட்ட பக்கிரிசாமி, ராஜேந்திரன் ஆகியோர்களை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு வந்து சேர்த்தேன் என்றும், இந்த விவரங்களை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை வழக்கில் இருந்து காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.05 17:37:45 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.